21st January 1964]

management, the General Manager of the mills was advised to start the stores with an elected Board. The sponsors had taken time to get this done, and the stores started functioning on 12th May 1963.

கனம் சபாநாயகர்: கேள்வி 54 தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

Land Mortgage Banks (Registration of Documents)

* 55 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the borrowers of the Co-operative Land Mortgage Banks are given facilities for registering documents up to the value of Rs. 2,000 in the Sub-Registrar's Office free of cost; and

(*b*) if so, whether there is any proposal before the Government to extend the same facilities to the borrowers from the credit societies also?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பெரும்பாலும் ஏழைகள் கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்குவதால், அவர்களுக்கு அனு கூலமாக இருக்கும் பொருட்டு இரண்டாயிரம் ரூபாய் வரையில் பதிவுக் கட்டணம் இல்லாமல் ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. மு. பொ. வடிவேல்: நில அடமான பாங்குகளில் கடன் வேண்டுமென்பதற்காகத்தான் பங்குத் தொகை கட்டுகிறார்கள். கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்ட பிறகுகூட ஐந்து ஆண்டுகள் ஆன பிறகுதான் பங்குத்தொகை திருப்பிக் கொடுக்கப்படும் என்ற விதி இருக்கிறது. கடைசித் தவணை கட்டும்போது அதை 'அட் ஜஸ்ட்' செய்துகொள்வதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: என்னிடத்தில் அதற்கு வேண்டிய தகவல் இல்லை.

எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை முடிவுகள்.

* *56* **கேள்வி.—திரு. செ. மாதவன் (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக):** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதி ரிசல்ட் வெளியிட ஆகும் காலதாமதத்தைத் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எந்த முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்?

[21st January 1964

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) The Government consider that the time now taken for publication of results for the S.S.L.C. examination, which is about two months after the examination, cannot be reduced in view of the amount of work involved.

புலவர் கா. கோவிந்தன் : தேர்வு நடந்து, முடிவு வெளியாவதற்கு இடையில் இரண்டு மாத காலம் இருப்பதால் மாணவர்களின் பெற்றோர்கள் விடைத் தாள்களைத் திருத்துகிறவர்களைத் தேடி அலையும் நிலை இருக்கிறது. இந்த அவகாசத்தைக் குறைத்தால் அந்த நிலை குறைய முடியும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே அரசாங்கம் அதற்கு வழிவகை செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் சொல்வது போல, விடைத் தாள்களைப் பரிசோதனை செய்கிறவர்களைத் தேடி பெற்றோர்கள் அலைகிறார்கள் என்றால், நாளைக் குறைத்தால் மட்டும் அது நிற்காது. விடைத் தாள்களைச் சரியாகப் பரிசோதனை செய்து முடிவு சொல்வதற்கு இரண்டு மாத அவகாசம் வேண்டியிருக்கிறது. ஆகையால், அதைக் குறைப்பதற்கில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தாள்களைத் திருத்துபவர்களின் எண்ணிக்கையைக் கூட்டினால் சீக்கிரமாகத் திருத்தப்பட்டுவிடும். ஆதலால், தாள்களைத் திருத்துகின்ற காலத்தின் அளவைக் குறைக்க முடியும். ஆகவே, அவ்வாறு செய்ய முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது இருக்கும் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அவசியம் இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : தேர்வு முடிவு சொல்வதற்குக் கால தாமதம் ஏற்படுவதால் கல்லூரியில் சேரக்கூடிய மாணவர்களுக்கு உடனடியாக மதிப்பு எண்கள் கிடைப்பதில்லை. மதிப்பு எண்ணை வைத்துத்தான் கல்லூரியில் சேர்க்க முடியும். மதிப்பு எண்கள் உள்ள சர்டிபிகட்டு புக் கிடைக்கக் கொஞ்சம் காலதாமதமானாலும் கல்லூரியில் இடம் கிடைக்காது என்கிற கஷ்டம் இருக்கிறது. ஆகவே, தாமதமில்லாமல் மதிப்பு எண்கள் சர்டிபிகட்டு புக் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிகளில் சேர்வதற்கு மனுப்போடவேண்டிய காலத்திற்கு முன்பே முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அதனால் சிரமம் ஏற்படுவதில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தேர்வு முடிவுகள் வெளிவருவதற்கு இரண்டு மாத காலம் ஆகிறது. முடிவு வெளிவந்து, சர்டிபிகேட் புத்தகங்கள் கால தாமதமாக வருவதால் கல்லூரியில் சேர்வதற்கு இடையூறாக இருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : கேரள மாநிலத்தின் எஸ்.எஸ்.எல்.ஸி. முடிவுகள் முன்னால் வெளியிடப்படுகிற காரணத்தாலும், நம்முடைய மாநில எஸ்.எஸ்.எல்.ஸி. முடிவுகள் பின்னால் வெளியிடப்படுகிற காரணத்தாலும், நமது மாநிலக் கல்லூரிகளில் சேர்வதற்கு கேரள மாணவர்களுக்கு முதல் சலுகையும், நம்முடைய மாணவர்களுக்குப் பின் சலுகையும் கிடைக்கிறது என்று கூறப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், இந்த மாநிலக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர எப்பொழுது மனுப் போடவேண்டுமோ அதற்கு முன்னதாகவே முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. முதலில் மனுப் போட்டவர்களுக்கு முதல் சலுகை என்பது, கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது, கல்லூரிகள் திறக்கப்படுவதற்கு முன்பே எஸ்.எஸ்.எல்.ஸி. முடிவுகள் வந்துவிடுகின்றன என்று சொன்னார்கள். ஆனால், மார்க் சர்டிபிகேட் தாமதமாக வருவதால் கல்லூரியில் அட்மிஷன் செய்துகொள்ள மனுப் போடத் தாமதமாகிறது. ஆகவே, மார்க்குகளும் சர்டிபிகேட்களும் சீக்கிரம் கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுவும் கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : இப்போது மாணவர்கள் எண்ணிக்கை அளவிற்கு மீறி இருப்பதால் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல. அதில் பல இடையூறுகளும் இருக்கின்றன. இக்காரணத்தையொட்டி இப்போது பல டிவிஷன்களாக பிரித்திருப்பதை அடிப்படையாக வைத்து எஸ்.எஸ்.எல்.ஸி. போர்ட்களைக்கூட டிவிஷன் வாரியாக அமைக்க வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு எஸ்.எஸ்.எல்.ஸி. போர்ட்கள் அமைக்க முடியாது. குறிப்பிட்ட யோசனைகள் ஏதாவது இருந்தால் அதை எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

பவர் லாண்டரி

* 57 **கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையில் சலவைத் தொழிலாளர்களுக்காக கூட்டுறவு முறையில் அரசாங்கம் ஒரு பவர் லாண்டரி ஏற்படுத்தத் துவங்கிய திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : The site for the establishment of a Power Laundry by the Madras Co-operative Dobikhana Limited has been selected. Plans and estimates for the